# பரீட்சகரின் அறிக்கை

## AA2 பரீட்சை – 2016 யூலை

## (AA25) வியாபாரச் சட்டமும் ஒழுக்கநெறியும்

---

### பகுதி A

**வினா இல. 01**

இவ்வினா 20 புள்ளிகளுக்காக 10 நோக்கச் சோதனை வினாக்களைக் கொண்டுள்ளது.

இந்த வினாவுக்கு அதிகளவான பரீட்சார்த்திகள் விடையளிக்க முனைந்துள்ளனர். பல பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் கிட்டத்தட்ட 60% மான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். மொத்தத்தில் இந்த வினாவுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்தது.

வினா இலக்கங்கள் 1.5 உம் 1.7 உம் சாதாரணமான இலகு வினாக்களாக இருந்தபோதிலும் பல பரீட்சார்த்திகள் அவ்விரு வினாக்களுக்கும் விடையளிப்பதற்குத் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது. முற்தேதியிடப்படுவதால் உருவாகின்ற முகவராண்மை உறவினை அடையாளங்காண வினா இல. 1.5 இல் பணிக்கப்பட்டிருந்தது. இதற்கான சரியான விடையாக, விடை இல. (2) இல் வழங்கப்பட்ட "வலுவாக்கல்" என்பது காணப்பட்டபோதிலும் பல பரீட்சார்த்திகள் இதற்கான விடையாக விடை இல. (3) இல் வழங்கப்பட்டிருந்த "அவசியத்தன்மை" யினைத் தெரிவுசெய்திருந்தனர். வினா இலக்கம் 1.7 இல் சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படாத கொடுப்பனவு முறையைத் தெரிவுசெய்யுமாறு கேட்கப்பட்டதற்கு, குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் சரியான விடையான விடை இல. (2) இல் வழங்கப்பட்ட காசுக்கட்டளை என்பதைத் தெரிவுசெய்யாது பிழையான விடையான விடை இல. (4) இல் வழங்கப்பட்ட முற்கொடுப்பனவு என்பதைத் தெரிவுசெய்திருந்தனர். மேலும் பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினா இல. 1.8 இற்கு விடையளிக் கையில் பல்வேறு சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர். அந்த வினாவுக்காக, அவர்கள் இலங்கையிலுள்ள இரண்டு (02) ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களை குறிப்பிட முடியாதிருந்தனர். பகுதி A இற்கு உயர்ந்தளவு புள்ளிகளைப் பெறுவதற்கு பாடத்திட்டம் முழுவதிலும் பூரணமான விளக்கத்தினைப் பரீட்சார்த்திகள் கொண்டிருக்க வேண்டும்.

### பகுதி B

**வினா இல. 02**

முரண்தடை மூலம் உருவான முகவராண்மையின் முகவராண்மைச் சட்டத்தினை அடிப்படையாகக் கொண்டதே இவ்வினாவாகும் (முரண்தடை விதி மூலமான முகவராண்மை). அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவினைச் சரியாக விளங்கிக்கொள்ளத் தவறியிருந்ததுடன் குறைந்தளவான பரீட்சார்த்திகள் மட்டுமே தரப்பட்ட சிறு விவரணத்தின் அடிப்படையில், உருவாகிய முகவராண்மை விதியினை அடையாளங்கண்டி ருந்தனர். சில பரீட்சார்த்திகள் முரண்தடை மூலம் உருவான முகவராண்மையை அடையாளங்கண்டிருந்த போதிலும் அவர்கள் அவற்றுக்கான சரியான விளக்கத்தினை அளிக்கத் தவறியிருந்தனர். அவர்கள் பல்வேறு விடயங்களை குறிப்பிட்டிருந்ததுடன் வேறுபட்ட முகவராண்மை விதிகளின் அடிப்படையில் சம்பந்தமற்ற கருத்துக்களையும் குறிப்பிட்டிருந்ததன் காரணமாக குறைந்தளவு புள்ளிகளையே பெற்றனர். மொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானதாக அமைந்திருக்கவில்லை.

## வினா இல. 03

அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முனைந்திருந்தனர். இவ்வினா FOB ஒப்பந்தத்திற்கும் CIF ஒப்பந்தத்திற்கும் இடையிலான வேறுபாட்டை விபரிக்குமாறு கோரியிருந்தது. சில பரீட்சார்த்திகள் முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர் ஆயினும் சில பரீட்சார்த்திகள் குறைந்தளவான புள்ளிகளையே பெற்றிருந்தனர். அவர்கள் பல விடயங்களைக் குறிப்பிட்டிருந்ததுடன் சம்பந்தமற்ற விடை களை வழங்கியிருந்தமையே இதற்கான காரணமாகும். வினாவில் FOB ஒப்பந்தத்திற்கும் CIF ஒப்பந்தத்திற் குமிடையிலான வேறுபாட்டை எழுதுமாறு கேட்கப்பட்டிருந்தும் சில பரீட்சார்த்திகள் அதனைக் கருத்திற் கொள்ளாது FOB ஒப்பந்தம் மற்றும் CIF ஒப்பந்தம் ஆகியவற்றை விபரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. மொத்தத்தில் அவர்கள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் கிட்டத்தட்ட 60% புள்ளிகளைப் பெற்றிருந்தனர். இவ்வினாவுக்கான செயலாற்றுகை ஓரளவு திருப்தியானது.

## வினா இல. 04

இவ்வினா, இரண்டு (02) வகையான குறுக்குக் கோடிடலை அவற்றின் சட்டரீதியான விளைவுகளுடன் விபரிக்குமாறு கோரியிருந்தது.

இங்கு விடைகளிலிருந்து அவதானிக்கப்பட்ட பொதுவான குறைபாடு யாதெனின், இரண்டு வகையான குறுக்குக் கோடிடலும் அவற்றின் சட்டரீதியான விளைவுகளின் அழுத்தமின்றி விபரிக்கப்பட்டிருந்தமையாகும்.

அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முனைந்திருந்தனர். சிலர் முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனராயினும் வேறு சிலர் குறைந்தளவான புள்ளிகளையே பெற்றிருந்தனர். இது அவர்கள் பல்வேறு சம்பந்தமற்ற விடயங்களைக் குறிப்பிட்டிருந்ததன் காரணமாக ஏற்பட்டதொன்றாகும். அவர்கள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் கிட்டத்தட்ட 60% புள்ளிகளைப் பெற்றிருந்தனர். மொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்தது.

## வினா இல. 05

இவ்வினா ‘‘தொழில் முடிவுறுத்தலை’’ அடிப்படையாகக் கொண்டதாகும். சில பரீட்சார்த்திகள் நல்ல புள்ளிகளைப் பெற்றிருந்தனர். ஆனால் சில பரீட்சார்த்திகள் குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் பகுதி (b) இற்கான பணியாளர்களின் தொழிலை முடிவுறுத்துகின்ற (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படாத இரண்டு (02) வகை ஊழியர்களைக் குறிப்பிடுவதற்குத் தவறியிருந்தனர். அவர்கள் சட்டத்துடன் தொடர்பற்ற விதத்தில் பொதுவான விடைகளையே வழங்கியிருந்தனர்.

மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியானதாக இல்லை. அவர்கள் இவ்வினாவுக்காக ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் கிட்டத்தட்ட 40% தொடக்கம் 50% வரையிலான புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

## வினா இல. 06

இவ்வினா, கணக்காளர் ஒருவர் முகங்கொடுக்கின்ற பிரதான ஒழுக்கநெறிப் பிரச்சினைகள் ஐந்தினை (05) குறிப்பிடுமாறு கோரியிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினா சம்பந்தமான பாடப்பரப்பில் ஆழமான அறிவைக் கொண்டிருந்தமையை அவர்கள் எழுதிய விடைகளிலிருந்து அவதானிக்கக்கூடியதாக இருந்தது. வினாவில் ‘‘குறிப்பிடுக’’ எனக் கூறப்பட்டிருந்தபோதிலும் சில பரீட்சார்த்திகள் கணக்காளர் முகங்கொடுக்கின்ற ஒழுக்கநெறிப் பிரச்சினைகள் பற்றி விரிவான விளக்கங்களை வழங்கியிருந்ததுடன் ஒதுக்கப்பட்ட நேரத்தைத் தேவையற்ற விதத்தில் செலவழித்திருந்தனர். மொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.

## பகுதி C

### வினா இல. 07

இவ்வினா பங்குடமைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு நன்றாக விடையளித்திருந்தனர். அவர்கள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் கிட்டத்தட்ட 70% / 80% புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்தின் விடயங்களுடன் தொடர்புபடுத்தாது பங்குடமையொன்றின் பங்காளர்களால் ஈட்டப்படும் இலாபத்தைப் பங்கிடும் பொறுப்பினை வெறுமனே விபரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ்வகையான வினாக்களில் தரப்பட்ட விவரணத்திற்கான சட்டப் பின்புலத்தை தொடர்புபடுத்துவதும் முடிவு ஒன்றினை வழங்குவதும் இன்றியமையாததாகும். குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் பங்குடமை ஒன்றைக் கலைக்கக்கூடிய பொதுவான சந்தர்ப்பங்களை எழுதியிருந்தனர். இது பிழையானதாகும். ஏனெனில் இங்கு வினாவின் பகுதி (b) இல் நீதிமன்றத்தின் தலையீட்டுடன் பங்குடமையைக் கலைக்கக்கூடிய சந்தர்ப்பங்களே கேட்கப்பட்டிருந்தது. எனவே விடையளிப்பதற்கு முன்னர் இயலுமானவரை வினாவினைச் சரியாக விளங்கிக்கொள்ளுதல் அவசியம். மொத்தத்தில் இவ்வினாவிற்கான செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.

### வினா இல. 08

இவ்வினா காப்புறுதிச் சட்டம் தொடர்பில் பரீட்சார்த்திகள் கொண்டுள்ள அறிவினைப் பரீட்சித்திருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் பகுதி (a) இற்கான அடிப்படைக் காப்புறுதி வகைகள் மற்றும் பகுதி (b) இல் தரப்பட்ட விவரணத்திற்கான காப்புறுதிக் கோட்பாடுகள் ஆகியவற்றை விளக்கியதன் மூலம் இந்த வினாவுக்கு முழுநிறைவான விடைகளை வழங்கியிருந்தனர். ஒரு சிலர் மட்டுமே இவ்வினாவுக்கு விடையளிப்பதில் தவறு விட்டிருந்தனர். ஆயினும் தொடர்புபட்ட காப்புறுதிச் சட்டத்தின் கோட்பாடுகளுடன் சம்பந்தப்படுத்தி விடையினை நியாயப்படுத்துவதற்கான உரிய காரணங்களை முன்வைக்காது, ரூ. 300,000/- இனை இரு காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்தும் பெறுவதற்கான உரிமைக்கோரிக்கையினைச் செய்வதற்கு சுனில் உரித்துடையவர் அல்லது உரித்துடையவரல்ல என்பதை மட்டும் பரீட்சார்த்திகள் குறிப்பிட்டிருந்த சில சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

மொத்தத்தில் இந்த வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.

### வினா இல. 09

இவ்வினா "பண மோசடி" என்பதன் கருத்தினை விபரிக்கும்படியும் 2006 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க பண மோசடிச் சட்டத்தின்படி சட்டவிரோதச் செயற்பாடுகள் ஐந்தினை (05) குறிப்பிடும்படியும் கோரியிருந்தது. சில பரீட்சார்த்திகள் இந்தப் பாடப்பரப்பு தொடர்பில் ஒன்றும் தெரியாதவர்களாக இருந்ததுடன் மத்திய வங்கியினால் புதிய பணத்தை மீள அச்சடித்தல், பணம் பௌதிக ரீதியில் பழுதடைந்திருப்பின் அல்லது நிறம்மாறியிருப்பின் அதனை தூய்மைப்படுத்தல் போன்ற பூரணமாகத் தொடர்பற்றதும் பிழையானதுமான விடைகளை வழங்கியிருந்தனர். இது மிகவும் இலகுவானதொரு வினாவாக இருந்தபோதிலும், பெரும்பாலான பரீட்சார்த்திகளால் இவ்வினாவுக்காக ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் 60% இனை மாத்திரமே பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. சிறு தொகையினர் மாத்திரமே இவ்வினாவுக்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

மொத்தத்தில், செயலாற்றுகை ஓரளவு திருப்திகரமானது.

## பகுதி D

## வினா இல. 10

இவ்வினா இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தது.

வினாவின் பகுதி (a) ஆனது, ஒப்பந்தச் சட்டத்தின் அடிப்படையில் தரப்பட்ட விவரணத்தின்படி, ரசித்திடமிருந்து வெகுமதியைப் பெறுவதற்கு நிசாதி சட்டபூர்வமான உரித்தினைக் கொண்டுள்ளாரா என்பதை ஆராயுமாறு கூறியிருந்தது. இது ஒப்பந்தச் சட்டத்தில் உள்ளடங்கியுள்ள முனைவு மற்றும் ஏற்பனவு பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவினைப் பரீட்சித்துள்ளது. இந்தப் பகுதிக்கு பெரும்பாலான பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், ஒப்பந்தச் சட்டத்தினைத் தொடர்புபடுத்தாது விடையாக வினாவில் தரப்பட்ட விடயங்களையே வெறுமனே குறிப்பிட்டிருந்த மிகச் சிறிய எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர். முனைவு பற்றிய விழிப்புணர்வைக் கொண்டிராதபோதும் அல்லது முனைவு பற்றி அறிந்திராத போதும் நிசாதி முனைவினை ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்பதைச் சில பரீட்சார்த்திகள் புறக்கணித்திருந்தனர். மொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.

வினாவின் பகுதி (b), லெஸ்லி அவர் விற்ற பொருளுக்கு உரிமையற்றவராக இருக்கும்போது லெஸ்லி யிடமிருந்து ரூ.60,000/- ஐ மீளப்பெறுவதற்கு சமனுக்கு உரித்துக் காணப்படுகின்றதா என்பதை ஆராயும்படி கேட்டிருந்தது. இது பொருட்கள் விற்பனை கட்டளைச் சட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் நிபந்தனைகளுடன் தொடர்புடையதாகும். தரப்பட்ட விவரணத்தைப் பொறுத்தமட்டில், விற்பவர் விற்பதற்கான உரிமையைக் கொண்டிராதவிடத்து அங்கு பிழையான நிலைமை காணப்படுவதை வாங்குபவர் தாமாகவே உணர்ந்து கொள்ளலாம் என்பதை அடையாளங்காண்பதற்குப் பெரும்பாலான பரீட்சார்த்திகள் தவறியிருந்தனர். இது பெரும்பாலான பரீட்சார்த்திகளால் மிகவும் மோசமாக விடையளிக்கப்பட்ட வினாவாகும். பரீட்சார்த்திகள் சம்பந்தமற்ற விடயங்களை வழங்கிய அதிகமான சந்தர்ப்பங்களும் வினாவில் தரப்பட்ட விடயங்களை வழங்கிய வேறு சில சந்தர்ப்பங்களும் காணப்படுவதுடன் அதற்கிணங்க அவர்கள் வினாவின் இந்தப் பகுதி முழுவதற்கும் குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

மொத்தத்தில், பெரும்பாலான பரீட்சார்த்திகளால் பிழைவிடப்பட்ட வினாவாக இது இருந்தது.

\- - -

### பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தினை விருத்திசெய்வதற்கு கவனத்திற்கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள்

1. வினாப்பத்திரத்தைக் கையில் எடுத்ததும் தரப்பட்ட அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும்.
2. வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். தேவையற்ற விடயங்களை எழுத வேண்டாம்.
3. பரீட்சையின்போது நேரத்தை வினைத்திறனான முறையில் முகாமை செய்யவும்.
4. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் மற்றும் உங்களது சுட்டிலக்கம் என்பன சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.
5. கடந்தகால வினாப்பத்திரங்களுக்கு விடையளிப்பதன் மூலம் நீங்கள் பாடம் சம்பந்தமான அறிவினை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்பதுடன் விடைகளை எழுதுவதற்கான ஆற்றலும் கிடைக்கப்பெறும்.
6. வினாப்பத்திரத்தின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள **செயல் வினைச் சொல் நிரலைக்** கண்டிப்பாகக் கடைப்பிடிக்கவும்.
7. சித்தியடைதல் என்னும் பிரதான நோக்கத்துடன் பரீட்சையினை எழுதவும்.

\- * * * -